# Bharathi Tamil Sangham

( Regd. )

FOUNDER PRESIDENT :
DR. K. S. KRISHNAN, D.SC., F.R.S., F.N.I.

93-A, RASH BEHARI AVENUE,
CALCUTTA-26.

17.11.55.

அன்புடையீர்,

வணக்கம்.

டிசம்பரில் நடைபெறவிருக்கும் பாரதி தமிழ்ச் சங்க விழாவை யொட்டி ஓர் மலர் வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

எங்களை ஊக்குவித்து, மேன் மேலும் சங்கம் வளரத் தங்கள் ஆசி மொழிகளை அனுப்பிவைத்தால், மலரில் அவற்றினை அமைத்திட வசதியாக இருக்கும். செய்திகள், ஆசி மொழிகள் ஆகியன இம்மாதம் 25ம் தேதியன்று அச்சகம் செல்லவிருப்பதால் தங்கள் ஆசி மொழிகளை அதற்கு முன்பாக அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

மிக்க அன்புடன்,
எஸ். சுப்புஸ்வாமி
(செயலாளர்)

டாக்டர். கே. எஸ். கிருஷ்ணன்,
தலைவர்,
தில்லித் தமிழ்ச் சங்கம்,
புதிய தில்லி.

# பாரதி தமிழ்ச் சங்கம்

(ஸ்தாபிதம் 1941)

| மலர் 2 | * | இதழ் 1 |
| --- | --- | --- |



## மாதாந்த அறிக்கை.

**மார்ச்சு—1952.**

93/எ, ராஷ் விகாரி அவென்யூ
கல்கத்தா – 26.

# புதிய நிர்வாகசபை.

கடந்த 2–3–52 ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு சங்கத்தலைவர் ஸ்ரீ எஸ். டி. ஸ்ரீநிவாஸன் அவர்களது தலைமையில் நடைபெற்ற சங்கத்தின் பதினோராவது வருடாந்திரப் பொதுக் கூட்டத்தில் நிகழும் ஆண்டு நிர்வாக சபைக்கு அடியிற்கண்ட அன்பர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர் என்பதை மிகமிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்தாபகத் தலைவர் :

டாக்டர் ஸர். கே. எஸ். கிருஷ்ணன். F. R. S.

தலைவர் :

ஸ்ரீ டி. எஸ். ஸீதாபதி.

உப-தலைவர் :

ஸ்ரீ அரு. சொக்கலிங்கம்.

காரியதரிசி :

ஸ்ரீ எஸ் குப்புஸ்வாமி.

உப-காரியதரிசி :

ஸ்ரீ ஜி. ராமமூர்த்தி.

பொக்கிஷதார் :

ஸ்ரீ எஸ். பி. வேங்கடபதி.

நூல்நிலையக் காப்பாளர் :

ஸ்ரீ ஆர். நாராயணஸ்வாமி.

அங்கத்தினர்கள் :

ஸ்ரீ ஏ. ஸ்வாமி ஐயர்.

ஸ்ரீ கே. செந்தியப்பன்.

ஸ்ரீ எச். செல்லமையர்.

கணக்குப் பரிசோதகர் :

ஸ்ரீ ஜி. பி. ஸாரதி.

ப. ந. தியாகராஜன்,

2—3—52. காரியதரிசி.

# பாரதி தமிழ்ச் சங்கம்

## கல்கத்தா - 26.

## மார்ச்சு மாத நிகழ்ச்சிகள்.

9—3—52 ஞாயிற்றுக்கிழமை.

டாக்டர் சுவாமிநாத ஐயர் ஜயந்தி.

பேசுபவர் :—ஸ்ரீ ந. சிங்காரம்.

பொருள் :—“ தமிழ் முனிவர் ”.

15—3—52 சனிக்கிழமை.

ஸ்ரீ பி. எஸ். வரதராஜய்யர்

பொருள் :—“ கொழும்புத் திட்டம் ”

22—3—52 சனிக்கிழமை.

ஸ்ரீ எஸ். ஆர். தியாகராஜன்

பொருள் :—“ இறையருள் ”

29—3—52 சனிக்கிழமை.

ஸ்ரீ வை. அண்ணுஸ்வாமி

பொருள் :—“ காளிதாசன் காவியம் ....

ரகு வம்சம் ”

கூட்டங்கள் மாலை 5-மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரும் வருக'

எஸ். குப்புஸ்வாமி

3—3—52. காரியதரிசி.

## நமது நஷ்டம்.

நமது சங்கத்தின் முன்னைய உபதலைவரும், சங்க கௌரவ அங்கத்தினருமான ஸ்ரீ கே. ஜி. சங்கரய்யர் அவர்கள் கடந்த 11—2—52 திங்கட்கிழமையன்று காலமானார் என்ற செய்தியை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ கே. ஜி. சங்கரய்யர் அவர்களை முதல் உபதலைவராகக் கொள்ளும் பேறு நமக்குக் கிட்டியது. சங்கத்தின் உப தலைவராகவும், கௌரவ அங்கத்தினராகவும் இருந்து ஸ்ரீ சங்கரய்யர் அவர்கள் நமது சங்க வளர்ச்சிக்குச் செய்துள்ள தொண்டு மகத்தானது. அன்னாரது மறைவால் பாரத நாடு ஒரு சிறந்த மேதையை இழந்துவிட்டது; தமிழ் இலக்கிய உல்கம் ஒப்பற்றதொரு ரஸிகனை இழந்து தவிக்கிறது. ஆரம்ப காலமுதல் நமக்கு வழிகாட்டியாயிருந்த ஒரு தலைவரை நாம் இழந்தது ஈடு செய்யமுடியாத் பெரும் நஷ்டம். சங்கத்தின்பால் ஸ்ரீ சங்கரய்யர் கொண்டிருந்த அன்பு சொல்லில் அடங்காது.

கடந்த ஆண்டு மார்ச்சு மாதத்தில் உடல் நலம் குன்றப் பெற்ற ஸ்ரீ சங்கரய்யர் கல்கத்தாவிற்கு வந்திருந்தபோது, சங்கத்தில் கம்பர் திருநாள் நடைபெறுகிறது எனத் தெரிந்தவுடன், தமது மோசமான உடல் நிலையையும் பொருட்படுத்தாது, நமது சங்கத்தின்பால் கொண்டுள்ள அன்பினால் விழாவிற்கு விஜயம்செய்து சிறப்பித்தார் என்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கது. அவரது மறைவு குறித்து இரண்டு தினங்கள் சங்க நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 13—2—52 அன்று அனுதாபக் கூட்டமொன்றும் நடைபெற்றது.

° ° ° ° °

தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளரும், நமது சங்கத்தின் கௌரவ அங்கத்தினருமான ஸ்ரீமான் **K. S. வேங்கடரமணி** அவர்கள் கடந்த 15—2—52 அன்று காலமான செய்தியைக் கேட்டு மிசவும் வருந்துகிறோம். ஸ்ரீ வேங்கடரபணி அவர்கள் சங்கம் ஆரம்பமான காலத்தில் நமது சங்சத்திற்கு விஜயம் செய்து அறிவுரை நிசழ்த்தியது அன்பர்களுக்கு நினைவு இருக்கலாம். அவரது பிரிவினால் தமிழுலகு ஒரு சிறந்த அறிஞரை இழந்து விட்டது. ஸ்ரீ வேங்கடரபணி அவர்களது பறைவுபற்றி சங்கத்தின் நடவடிக்கைகள் ஒரு தினம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. 17—2—52 அன்று காலை அனுதாபக் கூட்டமொன்று நடைபெற்றது.

# BHARATI TAMIL SANGHAM (Regd.)

Note address

**93/A, RASH BEHARI AVENUE, CALCUTTA.**

Telegrams : TAMIZH, CALCUTTA.

*Founder President*—**Dr. K. S. Krishnan**, F.R.S.

At the 14th general meeting of the SANGHAM held on the 3rd April 1955, the following persons have been unanimously elected for the year 1955—56.

*President*—
Sri O. S. V. MANIAM

*Vice President*—
Sri S. P. VENKATAPATHY

*Secretary*—
Sri S. KUPPUSWAMI

*Asst. Secretary*—
Sri SIVA RAMAKRISHNAN

*Treasurer*—
Sri K. S. RAMAN

*Librarian*—
Sri K. VEERAMANI

*Committee Members*—
Sri S. K. RAMASESHAN,
Sri M. RAMASWAMY,
Sri R. APPADURAI

*Auditor*—M. K. RANGANATHAN

CALCUTTA
3. 4. 55.

**G. RAMAMURTHY,**
*Secretary.*

Dr. K. S. Krishnan

DSc, FRS, FNI.

Director National Physical Laboratory

New Delhi





# பாரதி தமிழ்ச் சங்கம்

(பதிவுற்றது)

93A, ராஷ்விஹாரி அவென்யூ
கல்கத்தா-26.

## 1959—டிசம்பர் மாத நிகழ்ச்சிகள்

அன்புடையீர்,

வணக்கம்.

நாளது டிசம்பர் மாதம் 25. 26, 27 தேதிகளில் பாரதி ஜயந்தி கொண்டாடப்படும். விழாவில் பிரதம விருந்தினராக, தமிழ்க்கடல் திரு. ராய. சொக்கலிங்கம் அவர்கள் கலந்து கொள்கிறார், விரிவான நிகழ்ச்சி நிரல் தொடரும் வழக்கம் போல் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

11-12-59 வெள்ளிக் கிழமை இரவு 8 மணிக்குச் சங்கத்தில் 'பாரதி பிறந்த நாள்' கொண்டாடப் படும். திரு. பாலகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் 'பாரதியார்' என்ற தலைப்பில் பேசுவார்.

அனைவரும் வருக.

கல்கத்தா
4-12 59

ஜி. ராமமூர்த்தி
செயலாளர்.

13 MAR 1952

# தமிழ் வளர்ச்சிக் கழகம்

(THE TAMIL ACADEMY)

ம. ப. பெரியசாமித் தூரன்
பிரதம ஆசிரியர்.

கலைக்களஞ்சியக் காரியாலயம்
சர்வகலாசாலைக் கட்டிடம்

சென்னை 5 1-3-1952

அன்புடையீர்,

நமஸ்காரம். இத்துடனே ஸ்ரீமான் டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களுடைய பிரயாணத் திட்டம் அனுப்பி யிருக்கிறேன். அதன்படி அவர் டில்லியில் வந்து தங்கி 11ம் தேதி காலை அங்கிருந்து சென்னைக்குப் புறப்படுவார்கள். டில்லியில் வந்த பிறகு தங்களுக்குப் போன் செய்வதாகவும், தங்களைச் சந்திப்பதாகவும் கூறி யிருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் மறு முறையும் தாங்கள் கலைக்களஞ்சியத்திற்கு எழுத வேண்டிய கட்டுரைகளைப்பற்றி ஞாபகமூட்ட விரும்புகிறேன். அணுச்சக்தியைப் பற்றியக் கட்டுரை முக்கியமாக முன்னாலேயே அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

பெதூரன்

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்,
டைரக்டர்,
நேஷனல் பிஸிகல் லெபாரட்டரி,
புதுடெல்லி.

## TOUR PROGRAMME OF SRI T.S.AVINASHILINGAM CHETTIAR

| | | | |
|---|---|---|---|
| 29--2--1952 | - Friday | - Dep: 6-49 P.M. | Coimbatore - Nilgiri Express |
| 1--3--1952 | - Saturday | - Arr: 7-05 A.M. | Madras |
| 2--3--1952 | - Sunday | - Dep: 8-30 A.M. | Madras - By Plane |
| | | - Arr: 2-30 P.M. | Calcutta |
| 3--3--1952 | - Monday | - Dep: 6-30 A.M. | Calcutta |
| | | - Arr: 9-55 A.M. | Benares |
| 4--3--1952 | - Tuesday | - ... | ... Stay at Benares |
| 5--3--1952 | - Wednesday | - Dep: 10-05 A.M. | Benares |
| | | - Arr: 1-25 P.M. | New Delhi |
| 6--3--1952 & 7--3--1952 | Thursday & Friday | - ... | ... Stay at New Delhi |
| 11 ~~8~~--3--1952 (11th) | - ~~Saturday~~ Tuesday | - Dep: 7-00 A.M. | New Delhi |
| | | - Arr: 3-40 P.M. | Madras |
| | | - Dep: 8-15 P.M. | Madras - Nilgiri Express |
| 12th ~~9~~--3--1952 | - ~~Sunday~~ Friday. | - Arr: 7-27 A.M. | Coimbatore - Vidyalaya |

M Viswanathan


P. C.

Copy to:

✓ The Sri Ramakrishna Math, Mylapore, Madras.
✓ The Editor, Tamil Encyclopedia, Madras.
The Principal, Central College of Karnatic Music, Madras.
The Secretary, Thirukkural Research Committee, Madras.
Swamiji-in-Charge, Sri Ramakrishna Sevashrama, Luxa, Benares.
Secretary, Sri Ramakrishna Mission, Belur Math P.O., Howrah Dt.
Swami Ranganadanandaji, Sri Ramakrishna Mission, New Delhi.

### TAPPAL INSTRUCTIONS

| | | | |
|---|---|---|---|
| 1-3-1952 to 3-3-1952 | -- | New Delhi |
| 4-3-1952 to 6-3-1952 | -- | Madras. |



# பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா.

FOUNDER PRESIDENT:
DR. SIR. K. S. KRISHNAN, Kt., D. Sc., F. R. S.

10-3-52

அன்புமிக்க டாக்டர் ஸர். கே. எஸ். கிருஷ்ணன் அவர்கட்கு
அநேக நமஸ்காரம்.

கடந்த 2-3-52ல் சங்கத்தின் வருடாந்திரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. புதிய நிர்வாக சபைக்கு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்களின் விபரம் இத்துடன் அனுப்பியுள்ள அறிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. இன்றைய தனித் தபாலில் ஆண்டு அறிக்கையும் அனுப்பப் பட்டுள்ளது.

மூன்று வருடத்திற்கு மேலாக தொடர்ந்து நிர்வாகத்தில் அங்கம் வகிக்கலாகாது என்ற சங்கவிதி இருக்கிறதன் காரணமாக இந்த ஆண்டு ஸ்ரீ. தியாகராஜன் ஓய்வு பெற்றுள்ளார்.

தங்களுடைய ஆசிகளை பெரிதும் எதிர் நோக்கி சங்கம் 12-வது வருடத்தின் வாயிலில் காலை வைத்திருக்கிறது.

தங்களுடைய ஆசிகளை வேண்டும்,

அன்பன்
எஸ். சுப்புஸ்வாமி
காரியதரிசி.

இணைப்பு: 1.

BHARATHI TAMIL SANGHAM, 93/A, RASH BEHARI AVENUE, CALCUTTA, 26.